வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 185 of 2010

வழக்கு சாட்சி – PW 11

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. மீனாட்சி | தொழில் | : | விவசாயம் |
| கணவர் பெயர் | : | சண்முகம் | வயது | : | |
| கிராமம் | : | பாப்பம்பாளையம் (ஊத்துக்குளி) | | | |
| தாலுக்கா | : | திருப்பூர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 13.10.2025.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் சட்டப்பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 13.10.2025.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். சம்பவத்தின்போது பனப்பாளையம் வரத்தோட்டத்தில் குடியிருந்து வந்தேன். நான் பல்லடம் அஞ்சலகத்தில் SB அக்கவுண்ட் எண் 304016 என்ற கணக்கு தொடங்கி பணம் போட்டு எடுத்து வந்தேன். நான் ரூ.3000,ரூ.2000 செலுத்தி எனக்கு கொடுத்த அக்கவுண்ட் புக்கில் வரவு வைத்து கொடுத்தார்கள். போஸ்ட் ஆப்சில் உள்ள லெட்ஜரில் வரவு வைக்கவில்லை. கடந்த 20.01.1996 ஆம் தேதி எனது அக்கவுண்டில் ரூ.2700 இருந்தது அந்த பணத்தினை கையொப்பம் போட்டு பணத்தை எடுத்துவிட்டதாக தெரிந்துக்கொண்டேன். 20.01.1996 ஆம் தேதி என்னை அஞ்சலகத்திற்கு வர சொன்னார்கள். எனது கையெழுத்தை அது என்னுடைய கையெழுத்து இல்லை என்று சொன்னேன்.

2) அதன் பிறகு நான் பணத்தை பெற்றுக்கொண்டேன். இது சம்மந்தமாக அஞ்சலக உட்கோட்ட ஆய்வாளர் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்தேன். அஞ்சலக கோப்பு ஏற்கனவே அ.த.சா.ஆ.46 குறியீடு செய்யப்பட்டுள்ளளது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1) நான் எழுதிக் கொடுத்த வாக்குமூலத்தில் பணம் கட்டுவதற்காக படிவங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 20.01.1996 அன்று அஞ்சலகத்திற்கு என்னை யார் வர சொன்னார்கள் என்று ஞாபகம் இல்லை. லெட்ஜரில் வரவு வைக்கவில்லை என்று விவரம் மற்றவர்கள் சொல்லி தான் எனக்கு தெரியுமா என்றால் நான் சென்றிருந்தேன் அப்போது மற்றவர்கள் சொன்னார்கள். அவ்வாறான விவரத்தை யார் சொன்னாக்ரள் என்பது ஞாபகமில்லை. எனக்கு வரவேண்டிய பணம் எனது கணக்கில் வரவு வைக்கப்பட்டதா என்றால் வரவு வைக்கப்படவில்லை. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இனங்கபொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2025.10.13 12:38:53 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

வாக்குமூலம்
குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்
வழக்கு எண் : CC 185 of 2010
வழக்கு சாட்சி – PW 12

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. அமித் லால் | தொழில் | : | மர அரவை மில் |
| தந்தை பெயர் | : | சிவிஜி சிவராஜ் | வயது | : | |
| கிராமம் | : | பைப்பாஸ் ரோடு<br>மடப்பாளையம் பல்லடம் | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 13.10.2025.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் சட்டப்பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 13.10.2025.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு மர அரவை மில் வைத்து தொழில் செய்து வருகிறேன். சம்பவத்தின்போது பனப்பாளையம் வரத்தோட்டத்தில் குடியிருந்து வந்தேன். நான் பல்லடம் அஞ்சலகத்தில் SB அக்கவுண்ட் எண் 303346 என்ற கணக்கு தொடங்கி பணம் போட்டு எடுத்து வந்தேன். கடந்த 1996 ஆம் வருடம் ரூ 5000/- எனது கணக்கில் வரவு வைத்து பணம் போட்டு எனது பாஸ்புக்கில் வரவு வைத்து கொடுத்தார்கள். பின்னிட்டு எனது பல்லடம் அஞ்சலகத்தில் இருந்து என்னை அழைத்து இருந்ததார்கள் நான் பல்லடம் அஞ்சலகம் சென்று எனது கையெழுத்தை காண்பித்தார்கள் அது எனது கையெழுத்து இல்லை என்று சொன்னேன். எனது அக்கவுண்டில் இருந்து ரூ.5000 கையாடல் செய்து இருப்பதை தெரிந்து கொண்டேன்.

2) அதன் பிறகு நான் பணத்தை பெற்றுக்கொண்டேன். இது சம்மந்தமாக அஞ்சலக உட்கோட்ட ஆய்வாளர் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்தேன். அஞ்சலக கோப்பு ஏற்கனவே அ.த.சா.ஆ.8 குறியீடு செய்யப்பட்டுள்ளளது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1) நான் எழுதிக் கொடுத்த வாக்குமூலத்தில் பணம் கட்டுவதற்காக படிவங்களை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் நான் தான் எழுதினேன். வரவு புத்தகத்தில் யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. 20.01.1996 அன்று அஞ்சலகத்திற்கு என்னை யார் வர சொன்னார்கள் என்று ஞாபகம் இல்லை. என்னிடம் காண்பித்த கையெழுத்தை யார் காண்பித்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. அவ்வாறான விவரத்தை யார் சொன்னார்கள் என்பது ஞாபகமில்லை. எனக்கு சேரவேண்டிய பணத்தை எனது அக்கவுண்டில் வரவு வைத்துவிட்டார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இனங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2025.10.13 12:39:01 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.